வான்முகில்
திருநெல்வேலி

# குழந்தைகளுக்கான
# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

## Constitutional Rights Education Programme for Children

"அரசமைப்பு உரிமைகளை குழந்தைகள் மத்தியில் பண்பாடாக வளர்த்தெடுப்போம்" என்ற இலக்கை முன் வைத்து, வான்முகில் அமைப்பின் முன்முயற்சியால் இந்த ஆண்டு தமிழகம் - புதுவையில் 17 மாவட்டங்களில் 125 கிராமங்களில் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 2500 குழந்தைகள் பங்கெடுக்கும் இக்கல்வித் திட்டத்தின் தொடக்க விழா 21 ஆகஸ்டு 2021 அன்று இணைய வழியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### 17 மாவட்டங்களில் 125 இடங்களில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்கள்

இத்திட்டம் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், புதுச்சேரி, பெரம்பலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் பணிபுரியும் 10 அடித்தள அமைப்புகளோடு இணைந்து 125 குழந்தைகள் மையங்களில் முன்னெடுக்கப்படுகிறது. அரசுசாரா அமைப்புகள் நடத்தும் மாலை நேர குழந்தைகள் மையங்களில் மட்டுமல்லாது, பள்ளிகளிலும், மாணவர் விடுதிகளிலும் இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை தமிழ்நாடு முழுவதும் கொண்டு செல்வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் வே.வசந்திதேவி அவர்களின் வழிகாட்டலும் ஆதரவும் இத்திட்டத்திற்கு உந்துதலாகவும் ஊக்கமாகவும் உள்ளது.

### அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகள்

சுதந்திரம், சனநாயகம், சமத்துவம், சமூகநீதி, சகோதரத்துவம், தனிநபர் மாண்பு, பன்மைத்துவம் போன்ற மதிப்பீடுகளை இந்திய அரசமைப்புச் சட்டம் உயர்த்திப் பிடிக்கிறது. ஆனால் இன்றைய இந்தியச் சூழலில் ஏற்றத்தாழ்வுகளும், சாதியப் பாகுபாடுகளும், சமயச் சண்டைகளும், சகிப்பின்மையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே செல்கிறது. சுருங்கிவரும் சனநாயகப் பரப்பும், அதிகரித்து வரும் பாகுபாட்டுச் சிந்தனைகளும் பல்வேறு உரிமை மீறல்களுக்கும், வன்முறைகளுக்கும் வழிவகுக்கின்றன, எனவே அரசமைப்பு உயர்த்திப் பிடிக்கும் உன்னத மதிப்பீடுகளை குழந்தைகள் மத்தியில் வளர்த்தெடுக்கும் நோக்கில், இந்த அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம் கொண்டு செல்லப்படுகிறது, குழந்தைகளை பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக்கும் முயற்சியில் - சனநாயகத்திலும், மனித

உரிமைகளிலும் நம்பிக்கை கொண்ட இளைய தலைமுறையை உருவாக்கும் எண்ணத்தில் - இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தில் பங்கேற்கும் குழந்தைகள்

இத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகள் அனைவரும் 11 முதல் 15 வயதைச் சார்ந்தவர்களாவர். இவர்கள் நடுநிலை அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் ஆவர். நலிவற்ற சமூகங்களிலிருந்து அனைத்து தரப்பட்ட குழந்தைகளும் இதில் பங்கு பெறுவர். குறிப்பாக ஆதிவாசிக் குழந்தைகள், அருந்தியர் குழந்தைகள், தலித் குழந்தைகள், சீர்மரபினர் குழந்தைகள், மீனவக் குழந்தைகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகக் குழந்தைகள், சமயச் சிறுபான்மையினர் குழந்தைகள் போன்று பல்வேறுபட்ட குழந்தைகளும் பங்கேற்கும் இந்தத் திட்டத்தின் அடிநாதமாக இந்திய அரசமைப்பின் முகப்புரையும், அடிப்படை உரிமைகள் பகுதியும் அமையும்.

## அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களுக்கான பாடநூல்கள்

"இந்தியக் குடிமக்களாகிய நாம்", "வாண்டுகள் பயணம்" என்ற தலைப்புகளில் இத்திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகளுக்கான இரு பாடநூல்கள் தயாராகி உள்ளன. விளையாட்டுகள், செய்முறைப் பயிற்சிகள், பாடல்கள், கதைகள், மேற்கோள்கள், உண்மைச் சம்பவங்கள் போன்றவை மூலம் குழந்தைகளுக்கு எளிதாக புரியும் வகையிலும், குழந்தைகளின் முழுமையான பங்கேற்பை உறுதிசெய்யும் நோக்கிலும் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பத்துக்கும் மேற்பட்ட கல்வியாளர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் இணைந்து பல்வேறு கட்டங்களாக உருவாக்கிய இப்பாடநூல்கள் அச்சு வடிவில் மட்டுமல்லாது, மின்னணு வடிவிலும் வெளிவரவிருக்கிறது.

## அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற நெறியாளர்களுக்கான பயிற்சி

125 கிராமங்களில் குழந்தைகளுக்கான அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றங்களை வழிநடத்தும் நெறியாளர்களுக்கு கடந்த செப்டம்பர் 21, 22, 23 ஆகிய மூன்று நாட்கள் திருச்சியில் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் 17 மாவட்டங்களிலிருந்து 70 நெறியாளர்கள் கலந்து கொண்டனர். ஏற்கெனவே இக்கல்வி மன்றங்களுக்கான தயாரிப்புப் பணிகளை கிராம அளவில் மேற்கொண்ட இவர்களுக்கு அரசமைப்பு உரிமைகளைப் பற்றிய அடிப்படைப் புரிதலை உருவாக்கி, குழந்தைகள் மத்தியில் இக்கல்வியைச் சிறப்பாகக் கொண்டு செல்லத் தேவைப்படும் திறன்களை வளர்க்கும் நோக்கில் இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாடநூல்களை நெறியாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து, அவற்றை குழந்தைகளுக்கு எடுத்துச் செல்லத் தேவையான செய்முறைப் பயிற்சியும், அரசமைப்பு உரிமை கல்வி மன்றங்களின் இலக்கு, திசைவழி, நோக்கங்கள் மற்றும் செயற்திட்டங்கள் குறித்த தெளிவும் இப்பயிற்சியில் வழங்கப்பட்டுள்ளது.

## அரசுப் பள்ளிகளில் அரசமைப்பு உரிமைக் கல்வி

தமிழ்நாட்டில் கொரோனா பெருந்தொற்று காரணத்தால் பள்ளிகள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக திறக்கப்படவில்லை. நவம்பர் 1-ஆம் தேதி முதல் 1 முதல் 8 வகுப்புகள் வரையிலான வகுப்புகள் திறக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டத்தை அனைத்து அரசு பள்ளிகளிலும் கொண்டு செல்லும் நோக்கில் பள்ளிக் கல்வித்துறை ஆணையாளர் திரு. நந்தகுமார் இ.ஆ.ப. அவர்களை நேரில் சென்று சந்தித்து இத்திட்டத்தை விளக்கியபோது, அவர் ஆர்வத்துடன் கேட்டறிந்து இதனைப் பரிசீலனை செய்வதாக கூறியுள்ளார். ஏற்கெனவே கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் இதே கோரிக்கையை வலியுறுத்தி மணப்பாறை சட்டமன்ற உறுப்பினரும் மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளருமான திரு.அப்துல் சமது, கல்வி மானியக் கோரிக்கையின் போது பேசியது குறிப்பிடத்தக்கது. இதற்கான ஆக்கப்பூர்வமான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.


**இந்திய அரசமைப்பு உரிமைகளை**
**வாழுந்தலைமுறையும்**
**வருங்காலத் தலைமுறையும்**
**கற்றுணரும் நோக்கில்**
**"அரசமைப்பு உரிமைக் கல்வி" திட்டத்தைப்**
**பள்ளிகளில், விடுதிகளில், சமூகத் தளத்தில்**
**நடவு செய்கிறோம்...**
**அறிவதிகாரத்தின்**
**நாற்றங்கால்களாய்!**

**இது வழக்கமான**
**வகுப்பறைக் கல்வி அல்ல...**
**வாழ்க்கைக் கல்வி!**
**சமூக சனநாயகத்தைப்**
**பொதுமைப்படுத்தும்**
**வாழ்க்கைக் கல்வி!**

## தோழமை அமைப்புகள்

ஹோப் நிறுவனம் ○ தோழமை ○ இந்தோ அறக்கட்டளை ○ சைல்டு வாய்ஸ் ○ தமிழ்நாடு கிராம புனரமைப்பு இயக்கம் ○ தூண்டில் மாணவர் இயக்கம் ○ சுடர் அறக்கட்டளை ○ ரியல் பவுண்டேசன் ○ பவர் அறக்கட்டளை ○ அலைகுடி மக்கள் சமூகப் பாதுகாப்பு சங்கம்







**தொடர்புக்கு**

**கா.கணேசன்**
திட்ட ஒருங்கிணைப்பாளர்
6382329079 / 9994368503

**எம்.ஏ.பிரிட்டோ**
திட்ட இயக்குநர்
9442618117

# வான்முகில்

## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

வான்முகில்
திருநெல்வேலி

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி
மின்னஞ்சல்: vaanmuhil@gmail.com